# திருப்பத்தூர் நகராட்சி

2025–ஆம் ஆண்டு மார்ச் மாதம் 20.03.2025–ம் நாள் வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு திருப்பத்தூர் நகராட்சி அலுவலக நகரமன்ற கூடத்தில் நகரமன்றத் தலைவர் அவர்களால் நடத்தப்பட உள்ள அவசரக் கூட்டத்திற்கான பொருட்கள் விபரம்.

## பொருட்கள்

756) திருப்பத்தூர் நகராட்சியின் குடிநீர் விநியோகிக்கும் பணிகளில் தென்பெண்ணை தலைமை நீரேற்று நிலையத்தில் இருந்து பிரதான குடிநீர் குழாய் 300mm DI பைப் லைன் மூலம் கொண்டு வரப்படுகிறது. தற்பொழுது தென்பெண்ணை முதல் திருப்பத்தூர் வரை செல்லும் மாநில நெடுஞ்சாலை (State Highway) விரிவாக்கப் பணிகள் நடைபெற்று வருவதால் குடிநீர் குழாயில் உடைப்பு ஏற்படுகிறது மற்றும் விடுப்பட்ட பகுதிக்கு புதிய இணைப்பு வழங்க வேண்டியுள்ளதாலும் மேற்கண்ட பகுதியில் பிரதான குடிநீர் குழாயில் உடைப்பு ஏற்பட்ட இடத்தில் புதியதாக அமைக்க மதிப்பீடு தொகை ரூ.6.00 இலட்சம் மட்டும். குடிநீர் பணியின் அவசியம் கருதி Section 57(7) ல் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு எதிர்நோக்கி நகரமன்ற தலைவர் முன் அனுமதி பெற சமர்பிக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**
மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.1291/2024/இ1
**தீர்மானம் எண்.756, நாள்.20.03.2025**
**நிராகரிக்கப்பட்டது**.

757). திருப்பத்தூர் நகராட்சியில் குடிநீர் பணியினை தனியார் பணியாளர்கள் ஒப்பந்ததாரர்கள் மூலம் தென்பெண்ணை தலைமை நீரேற்று நிலையம், சக்கரக்குப்பம் பூஸ்டர் நிலையம், அம்பலூர் நீரேற்று நிலையம் நகர பகுதியில் உள்ள ஐந்து மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள், பாலம்மாள் காலனி RO Plant இயக்குவதற்கு போதுமான குடிநீர் பணியாளர்கள் இல்லாததாலும் குடிநீர் விநியோகம் பணி தடைப்படாமல் இருக்கவும் தனியார் வசம் தென்பெண்ணை தலைமை நீர் ஏற்று நிலையம் 6 நபர், அம்பலூர் தலைமை நீர் ஏற்று நிலையம் 5 நபர், பாலம்மாள் காலனி மேல்நீர் தேக்கத்தொட்டி பராமரிப்பு 1 நபர், L&T டேங்க் மேல்நீர் தேக்கத்தொட்டி 1 நபர், R.O Plant பராமரிப்பு 1 நபர், வெங்கடேஸ்வரா நகர் மேல்நீர் தேக்கத்தொட்டி பராமரிப்பு 1 நபர், குள்ளாச்சாரி வட்டம் மேல்நீர் தேக்கத்தொட்டி பராமரிப்பு 1 நபர், TNHB Phase–I மேல்நீர் தேக்கத்தொட்டி பராமரிப்பு 1 நபர், தென்பெண்ணை, அம்பலூர் தலைமை நீரேற்று நிலையத்திற்கு மின் பணியாளர் 1 நபர், பிட்டர் 1 நபர் ஆக மொத்தம் 19 ஒப்பந்த பணியாளர்களை அமர்த்தி இயக்குவதற்கு நவம்பர் 2024 உடன் முடிவடைந்துள்ளது. மேலும் நகரமன்ற தீர்மானம் எண்.615, நாள் 30.10.2024ல் ரூ.8.50 இலட்சத்திற்கு தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. எனவே ஒப்பந்தப்புள்ளி கோர கால அவகாசம் வேண்டியுள்ளதாலும் மற்றும் ஏற்கனவே 01.12.2024 முதல் 28.02.2025 வரை கால நீட்டிப்பு வழங்கியது முடிவுற்றதாலும், குடிநீர் பணியின்

அவசர அவசியம் கருதி ஏற்கனவே குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கி பணிகள் மேற்கொண்டு வரும் SRV Constructions என்ற நிறுவனத்தாரருக்கு 01.03.2025 முதல் 31.05.2025 வரை மூன்று மாதத்திற்கு ஒப்பந்தப்புள்ளி பணியினை கால நீட்டிப்பு வழங்கி செலவினம் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி நகரமன்ற தலைவர் அவர்கள் மேற்கொண்ட நடவடிக்கைகளுக்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்: 9131/2024/இ1**

**தீர்மானம் எண்.757, நாள்.20.03.2025**

**நிராகரிக்கப்பட்டது**

758). திருப்பத்தூர் நகராட்சியில் மேற்கொள்ளப்படும் பணிகள் மற்றும் பல்வேறு அரசு திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் பணிகள் செய்தி தாளில் விளம்பரம் செய்யப்பட்டதின் செலவினத் தொகையின் விவரம் கீழ்கண்டவாறு உள்ளதை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | செய்தித்தாள் பெயர் | தொகை ரூபாயில் |
|---|---|---|
| 1 | மாலை முரசு (பொங்கல் மலர் 2025) | 9975.00 |
| 2 | தினத்தந்தி (பொங்கல் மலர் 2025) | 28140.00 |
| 3 | மாலை மலர் | 9975.00 |
| 4 | தின மலர் | 12663.00 |
| | | 9286.00 |
| 5 | மாலை தமிழகம் | 23100.00 |

**அலுவலக குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.684/2022/இ1

**தீர்மானம் எண்.758, நாள்.20.03.2025**

**நிராகரிக்கப்பட்டது**

759). திருப்பத்தூர் நகராட்சி பொது சுகாதாரப் மலேரியா பிரிவின் கீழ் 36 வார்டுகளிலும் எதிர்வரும் மழை காலங்களை கருத்தில் கொண்டு திருப்பத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் டெங்கு காய்ச்சலை ஏற்படுத்தக்கூடிய முதிர் கொசுக்களை அழிக்க கொசு புகை போக்கி இயந்திரங்கள் (PULSE FOG) எண்ணிக்கை 5 லிட்டர் கொள்ளளவு டீசல் கொண்ட (5 LITRE CAPACITY) கொசு புகை போக்கி இயந்திரம் வாங்க ஆகும் தோராய செலவினத் தொகை ரூ.5.00/- இலட்சம் செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

<u>அலுவலக குறிப்பு :</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத் தொகையினை பொது நிநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.1715/2024/எச்1

**தீர்மானம் எண்.759, நாள்.20.03.2025**
**நிராகரிக்கப்பட்டது**

760). திருப்பத்தூர் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவின் கீழ் 36 வார்டுகளில் வீடு வீடாக சென்று DBC பணியாளர்களின் மூலமாக மழைநீர் தேங்கி நிற்கும் தண்ணீரில் கொசுப்புழு அழிக்க பயன்படுத்தப்படும் (அபேட்) டெமிபாஸ் 50% EC (TEMEPHOS 50% EC) இருப்பு மிகவும் குறைவாக இருப்பதால் பொதுமக்களின் அவசரம் அவசியம் நலன் கருதி டெமிபாஸ் வாங்கி இருப்பு பதிவேட்டில் இருப்பு வைத்து பயன்படுத்திக் கொள்ள தோராய செலவினத் தொகை ரூ.5.00/- இலட்சம் செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

| வ.எண். | பொருள் | தேவைப்படும் அளவு |
|---|---|---|
| 1 | டெமிபாஸ் 50% EC | 300 லிட்டர் |

<u>அலுவலக குறிப்பு :</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத் தொகையினை பொது நிநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.1719/2024/எச்1

**தீர்மானம் எண்.760, நாள்.20.03.2025**
**நிராகரிக்கப்பட்டது**

761). திருப்பத்தூர் நகராட்சியில் பொறியியல் பிரிவு மற்றும் பொது சுகாதார பிரிவின் கீழ் பயன்பாட்டில் உள்ள வாகனங்களுக்கு கீழ்காணுமாறு இன்சூரன்ஸ் புதுப்பிக்க The New India Assurance Company Ltd., Tirupathur Branch Office – 713001 என்ற நிறுவனத்திற்கு தொகை ரூ.1,00,978/– மட்டும் வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | வண்டி எண் | செலுத்த வேண்டிய காப்பீடு தொகை ரூ. |
|---|---|---|
| 1 | TN 23 BP 3026 – நகராட்சி பொறியாளர் வாகனம் | 12,641.00 |
| 2 | TN 83 MB 5085 –நகராட்சி ஆணையாளர் வாகனம் | 14,446.00 |
| 3 | TN 83 MB 5062 – நகரமன்ற தலைவர் வாகனம் | 26,197.00 |
| 4 | TN 83 P 6545 ஜெட் ராட் வாகனம் – பொது சுகாதார பிரிவு | 47,694.00 |
| | **மொத்தம்** | 1,00,978.00 |

**அலுவலக குறிப்பு:**

மன்றம் ஏற்றுகொள்ளலாம்.

ந.க.எண். 0158/2025/இ1

**தீர்மானம் எண்.761, நாள்.20.03.2025**

**நிராகரிக்கப்பட்டது.**

762). திருப்பத்தூர் நகராட்சியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2024–25 கீழ் கீழ்கண்ட பணி செய்ய தொகை ரூ.2.00/–இலட்சம் மதிப்பீட்டில் 13.12.2024–ஆம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியின் ஒப்பு நோக்கு படியல் விவரம் கீழ்கண்டுள்ளவாறு

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் |
|---|---|---|---|
| 1 | Providing Smart Classroom for Municipality Middle School, Thirumal Nagar Ward no.36 in Tirupathur Municipality. | 2.00 | Five Star Solar and Aqua, ஒப்பந்ததாரர், ஒசூர் 0.63% குறைவு |
| | | | MSR Enterprises, ஒசூர் 1.15% அதிகம் |
| | | | M Excel Ports Pvt Ltd., திருப்பத்தூர் 19.60% அதிகம் |

| | | | |
|---|---|---|---|
| | | | Sarvesh Ads, ஒப்பந்ததாரர், திருப்பத்தூர் 19.00% அதிகம் |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் Five Star Solar and Aqua, ஒப்பந்ததாரர், ஒசூர், அவர்கள் மதிப்பீட்டுத் தொகையை விட 0.63% குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ளார். எனவே குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய Five Star Solar and Aqua, ஒப்பந்ததாரர், ஒசூர், என்பவருக்கு 20.12.2024 அன்று பணி உத்தரவு வழங்கப்பட்டு, பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் விவரத்தினை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u>

1. மன்றம் ஏற்றுக்கொள்ளலாம்.

ந.க.எண்.**1504/2024/இ1**

**தீர்மானம் எண்.762, நாள்.20.03.2025**
**நிராகரிக்கப்பட்டது.**

763). திருப்பத்தூர் நகராட்சியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2024–25 கீழ் கீழ்கண்ட பணி செய்ய தொகை ரூ.2.00/–இலட்சம் மதிப்பீட்டில் 13.12.2024–ஆம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியின் ஒப்பு நோக்கு படியல் விவரம் கீழ்கண்டுள்ளவாறு

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் |
|---|---|---|---|
| 1 | Providing Smart Classroom for Municipality Middle School, Velan Nagar Ward no.32 in Tirupathur Municipality. | 2.00 | Five Star Solar and Aqua, ஒப்பந்ததாரர், ஒசூர் 0.63% குறைவு |
| | | | MSR Enterprises, ஒசூர் 1.15% அதிகம் |
| | | | M Excel Ports Pvt Ltd., திருப்பத்தூர் 24.36% அதிகம் |
| | | | Sarvesh Ads, ஒப்பந்ததாரர், திருப்பத்தூர் 19.00% அதிகம் |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் Five Star Solar and Aqua, ஒப்பந்ததாரர், ஒசூர், அவர்கள் மதிப்பீட்டுத் தொகையை விட 0.63% குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ளார். எனவே குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய Five Star Solar and Aqua, ஒப்பந்ததாரர், ஒசூர், என்பவருக்கு 20.12.2024 அன்று பணி உத்தரவு வழங்கப்பட்டு, பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் விவரத்தினை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u>

1. மன்றம் ஏற்றுக்கொள்ளலாம்.

ந.க.எண்.1504/2024/இ1

**தீர்மானம் எண்.763, நாள்.20.03.2025**

**நிராகரிக்கப்பட்டது.**

764). திருப்பத்தூர் நகராட்சியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2024-25 கீழ் கீழ்கண்ட பணி செய்ய தொகை ரூ.40.00/-இலட்சம் மதிப்பீட்டில் 13.12.2024-ஆம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியின் ஒப்பு நோக்கு படியல் விவரம் கீழ்கண்டுள்ளவாறு

| **வ.எண்** | **பணியின் பெயர்** | **மதிப்பீட்டுத் தொகை ரூ. இலட்சத்தில்** | **ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம்** |
|---|---|---|---|
| 1 | Relaying of Black Top Suface Road and Culvert to Pudupet Main road to Valluvar Nagar (Near Railway Station) at Ward No.15 in Tirupathur Municipality. | 40.00 | திரு.S.குணசேகரன், ஒப்பந்ததாரர், திருப்பத்தூர் 0.05% குறைவு |
| | | | திரு.S.இராஜேந்திரன், ஒப்பந்ததாரர், திருப்பத்தூர் 1.09% அதிகம் |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.S.குணசேகரன் ஒப்பந்ததாரர், திருப்பத்தூர், அவர்கள் மதிப்பீட்டுத் தொகையை விட 0.05% குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ளார். எனவே குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய திரு.S.குணசேகரன் ஒப்பந்ததாரர், திருப்பத்தூர், என்பவருக்கு 20.12.2024 அன்று பணி உத்தரவு வழங்கப்பட்டு, பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் விவரத்தினை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u>

1. மன்றம் ஏற்றுக்கொள்ளலாம்.

ந.க.எண்.960/2024/இ1

**தீர்மானம் எண்.764, நாள்.20.03.2025**

**நிராகரிக்கப்பட்டது.**

765). திருப்பத்தூர் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் உள்ள அறிவுசார் மையத்தில் மாணவர்கள் படிப்பதற்கு TNPSC, TET, TRB, NEET, SSC, RRB, Police ஆகிய போட்டித் தேர்வுகளுக்கு தேவையான புத்தகங்கள் வாங்க மாவட்ட ஆட்சித்தலைவர், திருப்பத்தூர் அவர்கள் அறிவுசார் மையம் குறித்த ஆய்வுக்கூட்ட நாள்.22.11.2024 அன்று தெரிவித்துள்ளார். எனவே அறிவுசார் மையத்திற்கு புதியதாக புத்தகங்கள் வாங்க மதிப்பீடு தொகை ரூ.1.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.765, நாள்.20.03.2025**
**நிராகரிக்கப்பட்டது.**

766). திருப்பத்தூர் நகராட்சி வார்டு எண்.8, இக்பால் தெரு மற்றும் எல்லையம்மன் கோயில் தெரு 9வது சந்து ஆகிய இரு பகுதிகளுக்கு புதிய போர்வேல் அமைத்து மின் இணைப்பு பெற்று புதிய சின்டெக்ஸ் டேங்க் பொருத்தும் பணிகள் மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.5.50 இலட்சம் மட்டும். எனவே மேற்கண்ட பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.766, நாள்.20.03.2025**
**நிராகரிக்கப்பட்டது.**

767). திருப்பத்தூர் நகராட்சி வார்டு எண் 34 பெரியார் நகர் நுண் உர செயலாக்க மையம் (MCC) பழுது மற்றும் பராமரிப்பு பணிக்கு ரூ.5.50 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் செய்ய 11.12.2024–ஆம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியின் ஒப்பு நோக்கு பட்டியல் விவரம் கீழ்கண்டுள்ளவாறு

| ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்புநோக்கு பட்டியல் விவரம் |
|---|---|---|
| திரு.S.ரவி, ஒப்பந்ததாரர் திருப்பத்தூர். | 5.50 | 0.35% சதவீதம் மதிப்பீட்டை விட குறைவு. |
| திரு.K.மூர்த்தி ஒப்பந்ததாரர் திருப்பத்தூர். | | 7.24% சதவீதம் மதிப்பீட்டை விட அதிகம். |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.S.ரவி, ஒப்பந்ததாரர், திருப்பத்தூர் அவர்கள் மதிப்பீட்டை விட குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ளார். எனவே குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய திரு.S.ரவி, ஒப்பந்ததாரருக்கு 20.12.2024 அன்று பணி உத்தரவு வழங்கப்பட்டதின் விவரத்தினை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்க்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் ஏற்றுக்கொள்ளலாம்.

2. குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.
3. பணிக்கான செலவீனத் தொகையினை பொது நிதி 2024–2025–ஆம் நிதியாண்டின் கீழ் வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.0767/2024/இ1**

**தீர்மானம் எண்.767, நாள்.20.03.2025**
**நிராகரிக்கப்பட்டது.**

768). திருப்பத்தூர் நகராட்சி வார்டு எண், 24 ஜார்ஜ் பேட்டை நுண் உர செயலாக்க மையம் (MCC) பழுது மற்றும் பராமரிப்பு பணிக்கு ரூ.5.50 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் செய்ய 11.12.2024–ஆம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியின் ஒப்பு நோக்கு பட்டியல் விவரம் கீழ்கண்டுள்ளவாறு.

| ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்புநோக்கு பட்டியல் விவரம் |
|---|---|---|
| திரு.S.ரவி,<br>ஒப்பந்ததாரர்<br>திருப்பத்தூர். | 5.50 | 0.30% சதவீதம் மதிப்பீட்டை விட குறைவு. |
| திரு.K.மூர்த்தி<br>ஒப்பந்ததாரர்<br>திருப்பத்தூர். | | 1.67% சதவீதம் மதிப்பீட்டை விட அதிகம். |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.S.ரவி, ஒப்பந்ததாரர், திருப்பத்தூர் அவர்கள் மதிப்பீட்டை விட குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ளார். எனவே குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய திரு.S.ரவி, ஒப்பந்ததாரருக்கு 20.12.2024 அன்று பணி உத்தரவு வழங்கப்பட்டதின் விவரத்தினை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்க்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் ஏற்றுக்கொள்ளலாம்.
2. குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.
3. பணிக்கான செலவீனத் தொகையினை பொது நிதி 2024–2025–ஆம் நிதியாண்டின் கீழ் வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.0766/2024/இ1**

**தீர்மானம் எண்.768, நாள்.20.03.2025**
**நிராகரிக்கப்பட்டது.**

769). திருப்பத்தூர் நகராட்சி வார்டு எண் 35, கலைஞர் நகர் நுண் உர செயலாக்க மையம் (MCC) பழுது மற்றும் பராமரிப்பு பணிக்கு ரூ.6.00 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் செய்ய 11.12.2024–ஆம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியின் ஒப்பு நோக்கு பட்டியல் விவரம் கீழ்கண்டுள்ளவாறு

| ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்புநோக்கு பட்டியல் விவரம் |
|---|---|---|
| திரு.S.குணசேகரன், ஒப்பந்ததாரர் திருப்பத்தூர். | 6.00 | 0.14% சதவீதம் மதிப்பீட்டை விட குறைவு. |
| திரு.S.இராஜேந்திரன், ஒப்பந்ததாரர் திருப்பத்தூர். | | 1.45% சதவீதம் மதிப்பீட்டை விட அதிகம். |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.S.குணசேகரன், ஒப்பந்ததாரர், திருப்பத்தூர் அவர்கள் மதிப்பீட்டை விட குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ளார். எனவே குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய திரு.S.குணசேகரன், ஒப்பந்ததாரருக்கு 20.12.2024 அன்று பணி உத்தரவு வழங்கப்பட்டதின் விவரத்தினை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்க்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் ஏற்றுக்கொள்ளலாம்.
2. குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.
3. பணிக்கான செலவீனத் தொகையினை பொது நிதி 2024–2025–ஆம் நிதியாண்டின் கீழ் வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.0765/2024/இ1**

**தீர்மானம் எண்.769, நாள்.20.03.2025**
**நிராகரிக்கப்பட்டது.**

770). திருப்பத்தூர் நகராட்சி வார்டு எண் 36, ப.உ.ச நகர் நுண் உர செயலாக்க மையம் (MCC) பழுது மற்றும் பராமரிப்பு பணிக்கு ரூ.9.90 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் செய்ய 11.12.2024–ஆம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியின் ஒப்பு நோக்கு பட்டியல் விவரம் கீழ்கண்டுள்ளவாறு

| ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்புநோக்கு பட்டியல் விவரம் |
|---|---|---|
| திரு.S.ரவி, ஒப்பந்ததாரர் திருப்பத்தூர். | | 0.51% சதவீதம் மதிப்பீட்டை விட குறைவு. |

| | | |
|---|---|---|
| திரு.K.மூர்த்தி ஒப்பந்ததாரர் திருப்பத்தூர். | 9.90 | 19.17% சதவீதம் மதிப்பீட்டை விட அதிகம். |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.S.ரவி, ஒப்பந்ததாரர், திருப்பத்தூர் அவர்கள் மதிப்பீட்டை விட குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ளார். எனவே குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய திரு.S.ரவி, ஒப்பந்ததாரருக்கு 20.12.2024 அன்று பணி உத்தரவு வழங்கப்பட்டதின் விவரத்தினை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்க்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் ஏற்றுக்கொள்ளலாம்.
2. குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.
3. பணிக்கான செலவீனத் தொகையினை பொது நிதி 2024–2025–ஆம் நிதியாண்டின் கீழ் வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.0764/2024/இ1**

**தீர்மானம் எண்.770, நாள்.20.03.2025**
**நிராகரிக்கப்பட்டது.**

771). திருப்பத்தூர் நகராட்சி வார்டு எண்.3, பழைய சிவராஜ்பேட்டையில் புதியதாக அங்கன்வாடி கட்டிடம் கட்டும் பணி மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.12.00 இலட்சம் மட்டும். எனவே மேற்கண்ட பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:</u>**
மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.771, நாள்.20.03.2025**
**நிராகரிக்கப்பட்டது.**

772). திருப்பத்தூர் நகராட்சி அலுவலகத்தில் உள்ள அனைத்து பிரிவுகளிலும் பயன்படுத்தப்பட்டு வரும் கணினிகள், பிரிண்டர்கள், ஸ்கேனர்கள் பழுது பார்க்கவும் மற்றும் Net work Cables பராமரிக்கவும், ஆண்டு பராமரிப்பு ஒப்பந்த பணி (AMC) மேற்கொள்ளுதல் பணிக்கு ரூ.4.00இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் செய்ய 11.12.2024–ஆம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியின் ஒப்பு நோக்கு பட்டியல் விவரம் கீழ்கண்டுள்ளவாறு

| ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்புநோக்கு பட்டியல் விவரம் |
|---|---|---|
| Good Luck Computers, ஒப்பந்ததாரர் திருப்பத்தூர். | 4.00 | 0.40% சதவீதம் மதிப்பீட்டை விட குறைவு. |
| திருமதி. மீனாட்சி, திருப்பத்தூர். | | 0.15% சதவீதம் மதிப்பீட்டை விட அதிகம். |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் Good Luck Computers, திருப்பத்தூர் மதிப்பீட்டை விட குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ளார். எனவே குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய Good Luck Computers என்ற நிறுவனத்திற்கு 20.12.2024 அன்று பணி உத்தரவு வழங்கப்பட்டதின் விவரத்தினை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.
3. பணிக்கான செலவீனத் தொகையினை பொது நிதி 2024–2025–ஆம் நிதியாண்டின் கீழ் வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.0068/2024/இ1**

**தீர்மானம் எண்.772, நாள்.20.03.2025**

**நிராகரிக்கப்பட்டது.**

773). திருப்பத்தூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.36 குள்ளாச்சாரி வட்டம் மற்றும் திருமால் நகர் ஆகிய பகுதிகளில் உள்ள மினி பவர் பம்பு பராமரிப்பு பணிக்கு ரூ.2.50இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் செய்ய 11.12.2024–ஆம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியின் ஒப்பு நோக்கு பட்டியல் விவரம் கீழ்கண்டுள்ளவாறு

| ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்புநோக்கு பட்டியல் விவரம் |
|---|---|---|
| திரு.S.ரவி, ஒப்பந்ததாரர் திருப்பத்தூர். | 2.50 | 0.30% சதவீதம் மதிப்பீட்டை விட குறைவு. |
| திரு.M.சங்கர், ஒப்பந்ததாரர், திருப்பத்தூர். | | 6.71% சதவீதம் மதிப்பீட்டை விட அதிகம். |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.S.ரவி, ஒப்பந்ததாரர், திருப்பத்தூர் அவர்கள் மதிப்பீட்டை விட குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ளார். எனவே குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய திரு.S.ரவி, ஒப்பந்ததாரருக்கு 20.12.2024 அன்று பணி உத்தரவு வழங்கப்பட்டதின் விவரத்தினை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்க்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் ஏற்றுக்கொள்ளலாம்.
2. குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.
3. பணிக்கான செலவீனத் தொகையினை பொது நிதி 2024–2025–ஆம் நிதியாண்டின் கீழ் வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.0068/2024/இ1**

**தீர்மானம் எண்.773, நாள்.20.03.2025**

**நிராகரிக்கப்பட்டது.**

774). திருப்பத்தூர் நகராட்சி வார்டு எண்.35 ஆறுமுகனார் தெருவில் மழைநீர் கால்வாய் சீரமைத்தல் பணிக்கு ரூ.8.00 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் செய்ய 09.01.2025–ஆம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியின் ஒப்பு நோக்கு பட்டியல் விவரம் கீழ்கண்டுள்ளவாறு

| ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்புநோக்கு பட்டியல் விவரம் |
|---|---|---|
| திரு.M.புஷ்பநாதன், ஒப்பந்ததாரர் திருப்பத்தூர். | 8.00 | 0.66% சதவீதம் மதிப்பீட்டை விட குறைவு. |
| திரு.S.ரவி, ஒப்பந்ததாரர், திருப்பத்தூர். | | 5.72% சதவீதம் மதிப்பீட்டை விட அதிகம். |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் M.புஷ்பநாதன், ஒப்பந்ததாரர், திருப்பத்தூர் அவர்கள் மதிப்பீட்டை விட குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ளார். எனவே குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய M.புஷ்பநாதன், ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் ஏற்றுக்கொள்ளலாம்.
2. குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

3. பணிக்கான செலவீனத் தொகையினை பொது நிதி 2024–2025–ஆம் நிதியாண்டின் கீழ் வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.1399/2024/இ1**

**தீர்மானம் எண்.774, நாள்.20.03.2025**
**நிராகரிக்கப்பட்டது.**

775). திருப்பத்தூர் நகராட்சி வார்டு எண்.36 திருமால் நகர் பகுதியில் அமைந்துள்ள ICDS கட்டிடத்திற்கு கூடுதல் பணிக்கு ரூ.7.50இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் செய்ய 11.12.2024–ஆம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியின் ஒப்பு நோக்கு பட்டியல் விவரம் கீழ்கண்டுள்ளவாறு

| ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்புநோக்கு பட்டியல் விவரம் |
|---|---|---|
| திரு.S.ரவி, ஒப்பந்ததாரர் திருப்பத்தூர். | 7.50 | 0.18% சதவீதம் மதிப்பீட்டை விட குறைவு. |
| திரு.M.சங்கர், ஒப்பந்ததாரர், திருப்பத்தூர். | | 8.84% சதவீதம் மதிப்பீட்டை விட அதிகம். |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.S.ரவி, ஒப்பந்ததாரர், திருப்பத்தூர் அவர்கள் மதிப்பீட்டை விட குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ளார். எனவே குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய திரு.S.ரவி, ஒப்பந்ததாரருக்கு 20.12.2024 அன்று பணி உத்தரவு வழங்கப்பட்டதின் விவரத்தினை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்க்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் ஏற்றுக்கொள்ளலாம்.
2. குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாருக்கு பணி உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.
3. பணிக்கான செலவீனத் தொகையினை பொது நிதி 2024–2025–ஆம் நிதியாண்டின் கீழ் வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.1424/2024/இ1**

**தீர்மானம் எண்.775, நாள்.20.03.2025**
**நிராகரிக்கப்பட்டது.**

776). திருப்பத்தூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.33, தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் (TNHB Phase I) பகுதி முதல் தெருவில் தார் சாலை அமைத்தல் பணிக்கு ரூ.1.50 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் செய்ய 11.12.2024–ஆம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியின் ஒப்பு நோக்கு பட்டியல் விவரம் கீழ்கண்டுள்ளவாறு

| ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்புநோக்கு பட்டியல் விவரம் |
|---|---|---|
| திரு.S.ரவி, ஒப்பந்ததாரர் திருப்பத்தூர். | 1.50 | 0.42% சதவீதம் மதிப்பீட்டை விட குறைவு. |
| திரு.M.சங்கர், ஒப்பந்ததாரர், திருப்பத்தூர். | | 4.98% சதவீதம் மதிப்பீட்டை விட அதிகம். |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.S.ரவி, ஒப்பந்ததாரர், திருப்பத்தூர் அவர்கள் மதிப்பீட்டை விட குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ளார். எனவே குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய திரு.S.ரவி, ஒப்பந்ததாரருக்கு 20.12.2024 அன்று பணி உத்தரவு வழங்கப்பட்டதின் விவரத்தினை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்க்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் ஏற்றுக்கொள்ளலாம்.
2. குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.
3. பணிக்கான செலவீனத் தொகையினை பொது நிதி 2024–2025–ஆம் நிதியாண்டின் கீழ் வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.1424/2024/இ1**

**தீர்மானம் எண்.776, நாள்.20.03.2025**
**நிராகரிக்கப்பட்டது.**

777). திருப்பத்தூர் நகராட்சி அலுவலகம் பின்புறம் அமைந்துள்ள நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு (UPHC) சுற்றுச்சுவர் மற்றும் இதர கூடுதல் பணிக்கு ரூ.9.90 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் செய்ய 11.12.2024–ஆம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியின் ஒப்பு நோக்கு பட்டியல் விவரம் கீழ்கண்டுள்ளவாறு

| ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்புநோக்கு பட்டியல் விவரம் |
|---|---|---|
| திரு.S.ரவி, ஒப்பந்ததாரர் திருப்பத்தூர். | 9.90 | 0.12% சதவீதம் மதிப்பீட்டை விட குறைவு. |
| திரு.M.சங்கர், ஒப்பந்ததாரர், திருப்பத்தூர். | | 7.29% சதவீதம் மதிப்பீட்டை விட அதிகம். |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.S.ரவி, ஒப்பந்ததாரர், திருப்பத்தூர் அவர்கள் மதிப்பீட்டை விட குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ளார். எனவே குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய திரு.S.ரவி, ஒப்பந்ததாரருக்கு 20.12.2024 அன்று பணி உத்தரவு வழங்கப்பட்டதின் விவரத்தினை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்க்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் ஏற்றுக்கொள்ளலாம்.
2. குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.
3. பணிக்கான செலவீனத் தொகையினை பொது நிதி 2024–2025–ஆம் நிதியாண்டின் கீழ் வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.1424/2024/இ1**

**தீர்மானம் எண்.777, நாள்.20.03.2025**
**நிராகரிக்கப்பட்டது.**

778). திருப்பத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.8 ஏ.கே.தெரு ஏரிக்கரை பகுதியில் மழைநீர் கால்வாய் அமைத்தல் பணிக்கு ரூ.5.00 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் செய்ய 11.12.2024–ஆம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியின் ஒப்பு நோக்கு பட்டியல் விவரம் கீழ்கண்டுள்ளவாறு

| ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்புநோக்கு பட்டியல் விவரம் |
|---|---|---|
| திரு.S.ரவி, ஒப்பந்ததாரர் திருப்பத்தூர். | 5.00 | 0.09% சதவீதம் மதிப்பீட்டை விட குறைவு. |
| SRV Constructions, ஒப்பந்ததாரர், திருப்பத்தூர். | | 5.62% சதவீதம் மதிப்பீட்டை விட அதிகம். |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.S.ரவி, ஒப்பந்ததாரர், திருப்பத்தூர் அவர்கள் மதிப்பீட்டை விட குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ளார். எனவே குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய திரு.S.ரவி, ஒப்பந்ததாரருக்கு 20.12.2024 அன்று பணி

உத்தரவு வழங்கப்பட்டதின் விவரத்தினை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்க்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் ஏற்றுக்கொள்ளலாம்.
2. குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.
3. பணிக்கான செலவீனத் தொகையினை பொது நிதி 2024–2025–ஆம் நிதியாண்டின் கீழ் வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.0751/2024/இ1**

**தீர்மானம் எண்.778, நாள்.20.03.2025**

**நிராகரிக்கப்பட்டது.**

779). திருப்பத்தூர் நகராட்சி பொறியியல் பிரிவின் அவசர அவசியம் கருதி ஒரு ஓட்டுநர் மூன்று மாதங்களுக்கு ஒருமுறை மன்ற அனுமதி பெற்று ஒப்பந்த அடிப்படையில் ஒரு ஓட்டுநரை நியமித்து கொள்ளவும் அவ்வாறு நியமனம் செய்யப்படும் ஓட்டுநருக்கு மாவட்ட ஆட்சித் தலைவரால் நிர்ணயிக்கப்படும் தினக்கூலியின் அடிப்படையில் ஊதியம் நிர்ணயித்து ஒப்பந்தக்காலம் முடிந்த உடன் பணி நீக்கம் செய்யப்படுவார்கள் என்ற நிபந்தனையுடன் பணி ஆணை வழங்க வேண்டும் என்ற இணை இயக்குநர் நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.21860/2002/ஜே3, நாள்.06.05.2002ல் தெரிவித்துள்ளதற்கிணங்க, நகர்மன்ற அனுமதி பெற்று ஒரு நபர் தினக்கூலி அடிப்படையில் பொறியியல் பிரிவில் பணிகள் மேற்கொள்ளப்பட்டது. பொறியியல் பிரிவில் பணிகளின் அவசியம் கருதி 01.01.2025 முதல் 31.03.2025 வரை ஒப்பந்த பணிக்கால நீட்டிப்பு ஊதியத்தை வழங்கவும் அதற்கான தோராய செலவினத் தொகை ரூ.3.00/– இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. பணிக்கான எந்தவொரு உரிமையும் கோரமாட்டேன் என்ற உறுதிமொழி படிவம் பெற்று பணி நீட்டிப்பு வழங்கவும் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

(அ) மன்றம் அனுமதிக்கலாம்.

(ஆ) மேற்படி நிபந்தனையுடன் பணி நீட்டிப்பு வழங்கவும், ஒப்பந்த ஓட்டுநர் வழங்கப்படும் ஊதியத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்.779, நாள்.20.03.2025**

**நிராகரிக்கப்பட்டது.**

780). திருப்பத்தூர் நகராட்சியில் டிராக்டர் ஓட்டுநர் (ஓய்வு) பணப்பயன்கள் வழங்க கோரி சென்னை உயர்நீதி மன்றத்தில் W.P.No.27627/2010–ல் நகராட்சி மீது வழக்கு தொடுத்து இருந்தார். மேற்படி வழக்கு 26.02.2024–ம் தேதியில் தீர்ப்பாணை வழங்கப்பட்டதில், மேற்படி பணப்பயன்கள் வழங்கும் பொருட்டு, சட்டக்கருத்துரை வேண்டி கடிதம் அனுப்பபட்டதில், கட்டணமாக தொகை ரூ.3,000/–ஐ வழங்க கோரியுள்ளார். மேலும், W.P.No.27627/2010 வழக்கிற்கு சென்னை உயர்நீதி மன்ற அரசு வழக்கறிஞர், திரு.டி.சீனிவாசன், அவர்களுக்கு மேற்படி தொகையினை வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:–</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.9047/1999/எச்1)

**தீர்மானம் எண்.780, நாள்.20.03.2025**

**நிராகரிக்கப்பட்டது.**

781). திருப்பத்தூர் நகராட்சி பழைய பேருந்து நிலையத்தில் புத்தகத் திருவிழா 22.03.2025 முதல் 31.03.2025 வரை அரசாணை எண் 205 மற்றும் மாவட்ட ஆட்சியர் அவர்களின் உத்தரவு படி தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த வளாகத்தில் அருகில் உள்ள நகராட்சி பணியாளர்களை ஒருங்கிணைத்து மேற்கொள்ள மாவட்ட ஆட்சியர் அவர்களால் உத்தரவிடப்பட்டுள்ளது. இதன் பெயரில் ஜோலார்பேட்டை/வாணியம்பாடி/ஆம்பூர் நகராட்சி தூய்மை பணியாளர்கள் மேற்பார்வையாளர்கள் ஓட்டுநர்கள் மற்றும் இதர பணியாளர்களுக்கு சிற்றுண்டி மதிய உணவு வழங்கிடவும் கிருமி நாசினி வாங்கி பயன்படுத்த வேண்டி உள்ளத்தால் இதற்கான உத்தேச செலவீனம் ரூ.2 லட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u> :–

1) பொதுசுகாதார அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.
2) இச்செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.781, நாள்.20.03.2025**

**நிராகரிக்கப்பட்டது.**

782). திருப்பத்தூர் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவிற்கு 36 வார்டுகளில் அன்றாட பொது கழிப்பிடங்கள் மற்றும் சமுதாய கழிப்பிடங்கள் மற்றும் பொது மக்கள் பயன்படுத்தும் பொது இடங்களில் பயன்படுத்தப்படும் கருப்பு பினாயில் மற்றும் வெள்ளை பினாயில் மற்றும் ஆசிட் ஆகியவைகளை SISCO கூட்டுறவு நிறுவனத்திடமிருந்து வாங்கி கொள்ள செலவின தொகை ரூ.2.00 இலட்சத்திருக்கு மன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>:

(1) மன்றம் அனுமதிக்கலாம்.
(2) மேற்படி செலவினத் தொகையினை
பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்:1721/2025/எச்1**

**தீர்மானம் எண்.782, நாள்.20.03.2025**
**நிராகரிக்கப்பட்டது.**

783). இந்நகராட்சிக்கு தேவையான எழுது பொருட்கள் மற்றும் கணினி உபகரணங்கள் பொருட்கள் ஆகியவைகள் அனைத்தும் அன்றாட அலுவலக உபயோகத்திற்கு பயன்படுத்தப்பட வேண்டி உள்ளதால் அதற்கான தோராய செலவினத் தொகை ரூ.2.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு :</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியத்தை முன்னிட்டு உள்ளூர் விலைப்புள்ளி பெற்று பொதுநிதியில் செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.783, நாள்.20.03.2025**
**நிராகரிக்கப்பட்டது.**

784). திருப்பத்தூர் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவின் கீழ் 36 வார்டுகளிலும் உள்ள கழிவுநீர் கால்வாய்களில் உள்ள கொசு புழுக்களை அழிக்க மைக்ரோ பேக்டீசைடு (MICRO BACTICIDE) LIQUID (OR) POWDER இருப்பு இல்லாத காரணத்தினால் பொதுமக்களின் அவசியம், அவசரம் நலன் கருதி மைக்ரோ பேக்டீசைடு வாங்கி இருப்பு பதிவேட்டில் இருப்பு வைத்து பயன்படுத்திக்கொள்ள தோராய செலவினத் தொகை ரூ.6.00/- இலட்சம் செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

| வ.எண். | பொருள் | தேவைப்படும் அளவு |
|---|---|---|
| 1 | மைக்ரோ பேக்டீசைடு | 300 லிட்டர் |

**<u>அலுவலக குறிப்பு :</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத் தொகையினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.1718/2024/எச்1

**தீர்மானம் எண்.784, நாள்.20.03.2025**
**நிராகரிக்கப்பட்டது.**

785). திருப்பத்தூர் நகராட்சி பொது சுகாதாரப் மலேரியா பிரிவின் கீழ் 36 வார்டுகளிலும் எதிர்வரும் மழை காலங்களை கருத்தில் கொண்டு நகரில் உள்ள கழிவுநீர் கால்வாய்களில் மலேரியா நோய்ப் பரப்பும் கொசுப்புழுக்களை அழிக்க பேசிலஸ் துருஞ்சி பேன்சிஸ் மருந்தை நிரப்பி தெளிக்கக் கூடிய நாப்ஷாக் ஸ்பிரேயர் (KNAPSACK SPRAYER) 5 இயந்திரங்கள் வாங்க ஆகும் தோராய செலவினத் தொகை ரூ.1.00/- இலட்சம் செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>அலுவலக குறிப்பு :</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத் தொகையினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.1716/2024/எச்1

**தீர்மானம் எண்.785, நாள்.20.03.2025**
**நிராகரிக்கப்பட்டது.**

786). திருப்பத்தூர் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவின் கீழ் 36 வார்டுகளில் முதிர் கொசு ஒழிப்பு புகை தெளிப்பு பணி மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் தற்போது இப்பணிக்கு பயன்படுத்தப்படும் பைரத்திரம் 2% (PYRETHRUM 2% EC) இருப்பு மிகவும் குறைவாக உள்ளதால், திருப்பத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பொதுமக்களின் அவசியம் அவசரம் நலன் கருதி பைரத்திரம் இருப்பு பதிவேட்டில் இருப்பு வைத்து வாங்க ஆகும் தோராய செலவினத் தொகை ரூ.5.00/- இலட்சம் செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

| வ.எண். | பொருள் | தேவைப்படும் அளவு |
|---|---|---|
| 1 | பைரத்திரம் 2% EC | 300 லிட்டர் |

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத் தொகையினை பொது நிநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.1717/2024/எச்1

**தீர்மானம் எண்.786, நாள்.20.03.2025**

**நிராகரிக்கப்பட்டது.**

787). துய்மை இந்தியா திட்டத்தின் கீழ் திருப்பத்தூர் நகராட்சிகளில் உள்ள 36 வார்டுகளிலும் அரசாணை நிலை எண்.183, நாள்.31.12.2022 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அறிவிப்புகள், சென்னை வெருநகர் பகுதி– கழிவு மேலாண்மை (ஒழுங்குமுறை) விதிகள் 2023–ம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் விதிமுறை படியும் அனைதுது கழிவுநீர் வாகனங்கள் அந்தந்த உள்ளாட்சி அமைப்புகளில் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தில் உரிய ஆவணங்கள் சமர்ப்பித்து உரிமம் பெறப்பட்டு உள்ளது. மேலும் அதனை செயல்படுத்தும் வகையில் 14420 கட்டணமில்லா தொலைபேசி எண் கழிவுநீர் மேலாண்மை குழு (மாவட்ட மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் அளவில்) அமைக்கப்பட்டு 100 சதவீதம் திறந்த வெளியில் மலம் கழித்தல் சிறுநீர் கழித்தல் இல்லாத நகராட்சியாக மற்றும் பாதுகாப்பான முறையில் செயல்பட்டு வருவதை பொதுமக்கள் இப்பொருள் குறித்து ஆட்சேபனை மற்றும் கருத்துக்கள் ஏதேனும் இருப்பின் எழுத்து மூலமாக 15 நாட்களுக்குள் ஆணையர்க்கு தெரிவிக்குமாறு தினமலர் செய்தி தாளில் விளம்பரம் செய்தமைக்கு அதற்கான தொகை ரூ.9286/– வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு மன்றப்பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.663/2015/எச்1)

**தீர்மானம் எண்.787, நாள்.20.03.2025**

**நிராகரிக்கப்பட்டது.**

788). திரு.பார்ம்சிங் என்பவரால் மாண்புமிகு உச்ச நீதிமன்த்தில் தொடரப்பட்ட வழக்கு எண்.W.P.(Civil) 324/2020 நாள்.20.10.2023 (ம) 11.12.2024 ஆகிய தேதிகளில் வழங்கப்பட்ட ஆணைகளின்படி மனிதக் கழிவுகளை மனிதர்களே கைகளால் அகற்றும் பணியினை மேற்கொள்ளும் கணக்கெடுப்பு செய்யப்பட்டதில் எவரும் கண்டறியப்படவில்லை என தெரிய வருகிறது. இதில் எதாவது

ஆட்சேபனைகள் இருந்தால் 15 தினங்களுக்குள் திருப்பத்தூர் நகராட்சி ஆணையர்க்கு எழுத்து மூலமாக தெரிவிக்கலாம் என பொதுமக்கள் அறியும் வகையில் தினசரி செய்தி தாளில் தினமலர் மற்றும் தினத்தந்தி செய்தி தாளில் விளம்பரம் செய்தமைக்கு அதற்கான கட்டண தொகை ரூ.8442+8442=16884/– தொகையினை வழங்கிட மன்றத்தின் அனுமதிக்காக மன்றப்பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு :</u>

மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.663/2015/எச்1)
**தீர்மானம் எண்.788, நாள்.20.03.2025**
**நிராகரிக்கப்பட்டது.**

789). நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் முன்னர் கொரோனா நோய் தடுப்பு நடவடிக்கை காரணமாக முதல் அலையின் போது தமிழ்நாடு முழுவதும் பொது ஊரடங்கு அமல்படுத்தியதால் 01.06.2020 முதல் 31.08.2020 ஆகிய மூன்று மாதங்களிலும் பின்னர் கோவிட்–19 (OMICRON) இரண்டாவது அலையின் போது 01.05.2021 முதல் 30.06.2021 வரையிலான இரண்டு மாதங்களிலும் கடைகள் நடத்தப்படாமல் மூடப்பட்டிருந்த நகராட்சி கடைகளுக்கும், செயல்படாமல் இருந்த தினசரி மார்க்கெட், பேருந்து சுங்க கட்டணம் , ஆடு அறுக்கும் தொட்டி, மிதிவண்டி மற்றும் இருசக்கர வாகனம் நிறுத்தும் இடம், புதிய பேருந்து நிலைய கட்டண கழிப்பிடம், பழைய பேருந்து நிலைய கட்டண கழிப்பிடம் மற்றும் வாரச்சந்தை கட்டண கழிப்பிடம் போன்ற ஆண்டு குத்தகை இனங்களுக்கும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு நிலுவை வைத்திராத குத்தகை உரிமதாரர்கள் மட்டும் 5 மாத கடை வாடகை மற்றும் 5 மாத குத்தகை தொகை செலுத்துவதிலிருந்து விலக்களித்து அரசாணை (ப) எண்.337 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்(ந.நி.4) துறை நாள்.16.06.2023 பெறப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அதற்கு முன்னர் ஏற்கனவே நகராட்சி நிர்வாக இயக்குநரகம், சென்னை அலுவலக படிவம் ந.க.எண்.22111/R3/2021 நாள்.18.11.2022ல் மொத்தம்313 நகராட்சி கடைகளுக்கும் 2020–2021ஆம் ஆண்டில் 7 குத்தகை இனங்களுக்கும் 2021–2022ஆம் ஆண்டில் 7 குத்தகை இனங்களுக்கும் கீழ்காணுமாறு குத்தகை தொகை செலுத்துவதிலிருந்து விலக்களிக்க வேண்டி உத்தேச தொகை (TENTATIVE WAIVER OF LEASE/RENT AMOUNT) பட்டியல் நகராட்சி நிர்வாக இயக்குநரகம், சென்னை அலுவலகத்திற்கு 30.11.2022ஆம் தேதியில் பூர்த்தி செய்து அனுப்பப்பட்டது.

| மொத்த குத்தகை இனங்களின் எண்ணிக்கை | விலக்கு அளிக்கப்பட வேண்டிய குத்தகை தொகை | | |
|---|---|---|---|
| | ஜீன் 2020 முதல் ஆகஸ்டு 2020 வரை 3 மாதங்களின் குத்தகை தொகை ரூ. | மே 2021 முதல் ஜீன் 2021 வரை 2 மாதங்களின் குத்தகை தொகை ரூ. | மொத்தம் 5 மாத குத்தகை தொகை ரூ |
| 327 | 68,83,035 | 42,20,410 | 1,11,03,445 |

மேற்காணும் மொத்தம் 5 மாத குத்தகை தொகை ரூ.1,11,03,445/-(ரூபாய் ஒரு கோடியே பதினோறு லட்சத்து மூன்றாயிரத்து நானூற்று நாற்பத்து ஐந்து மட்டும்)-ஐ குத்தகைதாரர்கள் நகராட்சிக்கு செலுத்துவதிலிருந்து அரசாணைப்படி விலக்கு அளிக்கப்பட்டுள்ளதால் மேற்படி குத்தகை கேட்பு தொகைகளை கணினியில் கேட்பிலிருந்து விலக்கு (WAIVER) அளிக்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:-</u>

1) அரசாணையை மன்றம் பதிவு செய்யலாம்.
2) அரசாணைப்படி 5 மாத குத்தகை தொகையை கேட்பிலிருந்து விலக்களிக்க மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.948/2022/அ4)

**தீர்மானம் எண்.789, நாள்.20.03.2025**
**நிராகரிக்கப்பட்டது.**

790). திருப்பத்தூர் நகராட்சி வார்டு எண்.1 இரட்டைமலை சீனிவாசன் பேட்டை, பகுதியில் மழைநீர் கால்வாய் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணிக்கு ரூ.6.00 இலட்சம் மதிப்பீட்டில் சட்ட மன்றம் உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம், 2024-2025-ஆம் ஆண்டு பணிகள் செய்ய 13.02.2025-ஆம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியின் ஒப்பு நோக்கு பட்டியல் விவரம் கீழ்கண்டுள்ளவாறு

| ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்புநோக்கு பட்டியல் விவரம் |
|---|---|---|
| திரு.கே.மூர்த்தி ஒப்பந்ததாரர் திருப்பத்தூர். | 6.00 | 0.16% சதவீதம் மதிப்பீட்டை விட குறைவு. |
| திரு.S.ரவி, ஒப்பந்ததாரர், திருப்பத்தூர். | | 1.25% சதவீதம் மதிப்பீட்டை விட அதிகம். |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் கே.மூர்த்தி, ஒப்பந்ததாரர், திருப்பத்தூர் அவர்கள் மதிப்பீட்டை விட குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ளார். எனவே குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய கே.மூர்த்தி, ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் ஏற்றுக்கொள்ளலாம்.
2. குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.
3. பணிக்கான செலவீனத் தொகையினை சட்ட மன்றம் உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் நிதி 2024–2025–ஆம் நிதியாண்டின் கீழ் வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.0087/2024/இ1**

**தீர்மானம் எண்.790, நாள்.20.03.2025**
**நிராகரிக்கப்பட்டது.**

791). திருப்பத்தூர் நகராட்சி வார்டு எண்.1, இரட்டைமலை சீனிவாசன்பேட்டை மெயின் ரோட்டில் ஓரமாக பழுதடைந்த நிலையில் உள்ள ஒரு மின்கம்பத்தினை மாற்றி அமைக்கும் பணி. எனவே மேற்கண்ட பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.791, நாள்.20.03.2025**
**நிராகரிக்கப்பட்டது.**

792). திருப்பத்தூர் நகராட்சி வார்டு எண்.1, தென்றல் நகரில் நகர சர்வே எண்.1945 மற்றும் 1950 மனைப்பிரிவு திருமதி.Dr.சியாமா சுப்பிரமணியம் பெயரில் உள்ளது. அவர்களுக்கு சொந்தமான இடத்தில் திருப்பத்தூர் நகராட்சி நிர்வாகம் சார்பாக மின்கம்பம், சாலை மற்றும் கால்வாய் அமைத்துள்ளார்கள் என ஆய்வு செய்ததில் தெரியவந்துள்ளது. எனவே மேற்படி இடத்தில் அமைந்துள்ள மின்கம்பம், சாலை மற்றும் கால்வாயை அப்புறப்படுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.792, நாள்.20.03.2025**
**நிராகரிக்கப்பட்டது.**

793). திருப்பத்தூர் நகராட்சி வார்டு எண்.4 கஸ்தூரிபாய் தெரு, பகுதியில் மழைநீர் கால்வாய் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணிக்கு ரூ.6.20 இலட்சம் மதிப்பீட்டில் சட்ட மன்றம் உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம், 2024–2025–ஆம் ஆண்டு பணிகள் செய்ய 20.12.2025–ஆம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியின் ஒப்பு நோக்கு பட்டியல் விவரம் கீழ்கண்டுள்ளவாறு

| ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்புநோக்கு பட்டியல் விவரம் |
|---|---|---|
| திரு.S. ரவி ஒப்பந்ததாரர் திருப்பத்தூர். | 6.20 | 0.12% சதவீதம் மதிப்பீட்டை விட குறைவு. |
| திரு.கே.முர்த்தி ஒப்பந்ததாரர், திருப்பத்தூர். | | 4.54% சதவீதம் மதிப்பீட்டை விட அதிகம். |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் S. ரவி ஒப்பந்ததாரர், திருப்பத்தூர் அவர்கள் மதிப்பீட்டை விட குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ளார். எனவே குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய S. ரவி, ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் ஏற்றுக்கொள்ளலாம்.
2. குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.
3. பணிக்கான செலவீனத் தொகையினை சட்ட மன்றம் உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் நிதி 2024–2025–ஆம் நிதியாண்டின் கீழ் வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.0087/2024/இ1**

**தீர்மானம் எண்.793, நாள்.20.03.2025**
**நிராகரிக்கப்பட்டது.**

794). திருப்பத்தூர் நகராட்சி வார்டு எண்.8, ஜின்னா ரோடு III பகுதியில் உள்ள Three Phase சர்வீஸ் உடன் கூடிய 800 அடி ஆழம் கொண்ட போர்வேல் மோட்டரின் சர்வீஸ் பாக்ஸ், மோட்டார் பைப்லைன் வயர் ஆகியவை சேதமைந்துள்ளது. அதனை மாற்றி புதியதாக பொருத்தும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை **ரூ.2.00இலட்சம்** மட்டும். எனவே மேற்கண்ட பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.794, நாள்.20.03.2025**
**நிராகரிக்கப்பட்டது.**

795). திருப்பத்தூர் நகராட்சி வார்டு எண்.8, எல்லையம்மன் கோயில் தெரு மெயின் பகுதியில் பழுதடைந்துள்ள சிமெண்ட் டேங்க், போர்வெல், வயரிங் கசிவு மற்றும் பைப்லைன் பழுது ஆகியவற்றை சீர் செய்யும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை **ரூ.1.30இலட்சம்** மட்டும். எனவே மேற்கண்ட பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:</u>**
மன்றம் அனுமதிக்கலாம்.
**தீர்மானம் எண்.795, நாள்.20.03.2025**
**நிராகரிக்கப்பட்டது.**

796). திருப்பத்தூர் நகராட்சி வார்டு எண்.8, எல்லையம்மன் கோயில் தெரு ஏரிக்கரை மேல் ரோடு குறுக்கு பகுதியில் சேதமைந்த பைப்லைன் பழுது பார்த்தல் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.2.00 இலட்சம் மட்டும். எனவே மேற்கண்ட பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:</u>**
மன்றம் அனுமதிக்கலாம்
**தீர்மானம் எண்.796, நாள்.20.03.2025**
**நிராகரிக்கப்பட்டது.**

797). திருப்பத்தூர் நகராட்சி வார்டு எண்.11 அப்துல் வாக் தெரு என்கிற பூக்கார தெருவில் நீர்த்தேக்க தொட்டி அமைத்து அக்தர் பாபா மியான் தெரு, அப்துல் அஜித் தெரு, அல்லா பக்ஸ் ஆகிய தெருக்களில் குழாய் மூலம் குடிநீர் விநியோகம் செய்து தர தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை **ரூ. 8.00 இலட்சம்** மட்டும். எனவே மேற்கண்ட பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:</u>**
மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.797, நாள்.20.03.2025**
**நிராகரிக்கப்பட்டது.**

798). திருப்பத்தூர் நகராட்சியில் வார்டு எண்.12 உள்ள ஸ்ரீ ராமநிலையம் நகராட்சி துவக்கப்பள்ளி, செங்குந்தர் தெருவில் உள்ள வகுப்பறை புனரமைப்பு பணி மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை **ரூ.7.50 இலட்சம்** மட்டும். எனவே மேற்கண்ட பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>**அலுவலக குறிப்பு:**</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.798, நாள்.20.03.2025**
**நிராகரிக்கப்பட்டது.**

799). திருப்பத்தூர் நகராட்சியில் வார்டு எண்.13 உள்ள தருமராஜா கோயில் நகராட்சி துவக்கப்பள்ளி, பேருந்து நிலையம் அருகில், உள்ள வகுப்பறை புனரமைப்பு பணி மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை **ரூ. 4.00 இலட்சம்** மட்டும். எனவே மேற்கண்ட பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>**அலுவலக குறிப்பு:**</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.799, நாள்.20.03.2025**
**நிராகரிக்கப்பட்டது.**

800). திருப்பத்தூர் நகராட்சி வார்டு எண்.15 வள்ளுவர் நகர் நகராட்சி தொடக்கப் பள்ளியில் வகுப்பறை புனரமைப்பு பணி மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை **ரூ.10.00இலட்சம்** மட்டும். எனவே மேற்கண்ட பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>**அலுவலக குறிப்பு:**</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.800, நாள்.20.03.2025**
**நிராகரிக்கப்பட்டது.**

801). திருப்பத்தூர் நகராட்சியில் வார்டு எண்.18 உள்ள அறிஞர் அண்ணா நகராட்சி துவக்கப்பள்ளி, கச்சேரி தெருவில் உள்ள வகுப்பறை புனரமைப்பு பணி மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை **ரூ.10.00 இலட்சம்** மட்டும். எனவே மேற்கண்ட பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.801, நாள்.20.03.2025**
**நிராகரிக்கப்பட்டது.**

802). திருப்பத்தூர் நகராட்சி வார்டு எண்.23, ஆரிப் நகர் ஒரு புதிய மின்கம்பத்தினை அமைக்கும் பணி. எனவே மேற்கண்ட பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.802, நாள்.20.03.2025**
**நிராகரிக்கப்பட்டது.**

803). திருப்பத்தூர் நகராட்சியில் வார்டு எண்.26 உள்ள கௌதமபேட்டை நகராட்சி துவக்கப்பள்ளி உள்ள வகுப்பறை புனரமைப்பு பணி மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை **ரூ.10. 00 இலட்சம்** மட்டும். எனவே மேற்கண்ட பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.803, நாள்.20.03.2025**
**நிராகரிக்கப்பட்டது.**

804). திருப்பத்தூர் நகராட்சியில் வார்டு எண்.32 வேலன் நகர் பகுதியில் உள்ள நகராட்சி நடுநிலைப் பள்ளியில் உள்ள வகுப்பறை புனரமைப்பு பணி மற்றும் HI –TECH LAB, SMART TV, 2 வகுப்பறைகளுக்கு GRILL GATE அமைக்கும் பணிக்கு மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை **ரூ. 9.00 இலட்சம்** மட்டும். எனவே மேற்கண்ட பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.804, நாள்.20.03.2025**
**நிராகரிக்கப்பட்டது.**

805). திருப்பத்தூர் நகராட்சியின் குடிநீர் விநியோகிக்கும் பணிகளில் அம்பலூர் தலைமை நீரேற்று நிலையத்தில் இருந்து பிரதான குடிநீர் குழாய் 400mm DI பைப் லைன் மூலம் கொண்டு வரப்படுகிறது. தற்பொழுது அம்பலூர் முதல் திருப்பத்தூர் வரை செல்லும் மாநில நெடுஞ்சாலை (State Highway) விரிவாக்கப் பணிகள் நடைபெற்று வருவதால் குடிநீர் குழாயில் உடைப்பு ஏற்படுகிறது மற்றும் விடுப்பட்ட பகுதிக்கு புதிய இணைப்பு வழங்க வேண்டியுள்ளதாலும் மேற்கண்ட பகுதியில் பிரதான குடிநீர் குழாயில் உடைப்பு ஏற்பட்ட இடத்தில் புதியதாக அமைக்க மதிப்பீடு தொகை ரூ.6.00 இலட்சம் மட்டும். குடிநீர் பணியின் அவசியம் கருதி Section 57(7) ல் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு எதிர்நோக்கி நகரமன்ற தலைவர் முன் அனுமதி பெற சமர்பிக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**
மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.1291/2024/இ1
**தீர்மானம் எண்.805, நாள்.20.03.2025**
**நிராகரிக்கப்பட்டது.**

806). திருப்பத்தூர் நகராட்சியில் குடிநீர் பணியினை தனியார் பணியாளர்கள் ஒப்பந்ததாரர்கள் மூலம் தென்பெண்ணை தலைமை நீரேற்று நிலையம், சக்கரக்குப்பம் பூஸ்டர் நிலையம், அம்பலூர் நீரேற்று நிலையம் நகர பகுதியில் உள்ள ஐந்து மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள், பாலம்மாள் காலனி RO Plant இயக்குவதற்கு போதுமான குடிநீர் பணியாளர்கள் இல்லாததாலும் குடிநீர் விநியோகம் பணி தடைப்படாமல் இருக்கவும் தனியார் வசம் தென்பெண்ணை தலைமை நீர் ஏற்று நிலையம் 6 நபர், அம்பலூர் தலைமை நீர் ஏற்று நிலையம் 5 நபர், பாலம்மாள் காலனி மேல்நீர் தேக்கத்தொட்டி பராமரிப்பு 1 நபர், L&T டேங்க் மேல்நீர் தேக்கத்தொட்டி 1 நபர், R.O Plant பராமரிப்பு 1 நபர், வெங்கடேஸ்வரா நகர் மேல்நீர் தேக்கத்தொட்டி பராமரிப்பு 1 நபர், குள்ளாச்சாரி வட்டம் மேல்நீர் தேக்கத்தொட்டி பராமரிப்பு 1 நபர், TNHB Phase–I மேல்நீர் தேக்கத்தொட்டி பராமரிப்பு 1 நபர், தென்பெண்ணை, அம்பலூர் தலைமை நீரேற்று நிலையத்திற்கு மின் பணியாளர் 1 நபர், பிட்டர் 1 நபர் ஆக மொத்தம் 19 ஒப்பந்த பணியாளர்களை அமர்த்தி இயக்குவதற்கு நவம்பர் 2024 உடன் முடிவடைந்துள்ளது. மேலும் நகரமன்ற தீர்மானம் எண்.615, நாள் 30.10.2024ல் ரூ.8.50 இலட்சத்திற்கு தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. எனவே ஒப்பந்தப்புள்ளி கோர கால அவகாசம் வேண்டியுள்ளதால் குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி ஏற்கனவே குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கி பணிகள் மேற்கொண்டு வரும் SRV Constructions என்ற நிறுவனத்தாரருக்கு 01.12.2024 முதல் 28.02.2025 வரை மூன்று மாதத்திற்கு ஒப்பந்தப்புள்ளி பணியினை கால நீட்டிப்பு வழங்கி செலவினம் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி நகரமன்ற தலைவர் அவர்கள் மேற்கொண்ட நடவடிக்கைகளுக்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்: 9131/2024/இ1**

**தீர்மானம் எண்.806, நாள்.20.03.2025**
**நிராகரிக்கப்பட்டது.**

807). திருப்பத்தூர் நகராட்சி வார்டு எண்.32 வேலன் நகர் பகுதியில் உள்ள நடுநிலைப்பள்ளிக்கு கீழ்தளம், மேல்தளம் ஆகிய இரண்டு தளத்திற்கு பாதுகாப்பு கிரில், கதவு மற்றும் கட்டிடத்திற்கு Weathering Course, Wiring Lettering Colouring பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை **ரூ.7.00 இலட்சம்** மட்டும். எனவே மேற்கண்ட பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.807, நாள்.20.03.2025**
**நிராகரிக்கப்பட்டது.**

808). திருப்பத்தூர் நகராட்சி வார்டு எண்.32 வேலன் நகர் பகுதியில் உள்ள நடுநிலைப்பள்ளிக்கு மேற்கூரை பிளாட் பார்ம டைல்ஸ் SS வேலை வயரிங் மற்றும் வடிக்கால் வசதி பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை **ரூ. 9.95 இலட்சம்** மட்டும். எனவே மேற்கண்ட பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.808, நாள்.20.03.2025**
**நிராகரிக்கப்பட்டது.**

809). திருப்பத்தூர் நகராட்சி வார்டு எண்.34 காமராஜர் நகர், பகுதியில் அங்கன்வாடி கட்டிடம் கட்டும் பணிக்கு ரூ.12.00 இலட்சம் மதிப்பீட்டில் சட்ட மன்றம் உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம், 2024–2025–ஆம் ஆண்டு பணிகள் செய்ய

20.12.2025–ஆம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியின் ஒப்பு நோக்கு பட்டியல் விவரம் கீழ்கண்டுள்ளவாறு

| ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்புநோக்கு பட்டியல் விவரம் |
|---|---|---|
| திரு.S. ரவி<br>ஒப்பந்ததாரர்<br>திருப்பத்தூர். | 12.00 | 0.56% சதவீதம் மதிப்பீட்டை விட அதிகம். |
| திரு.கே.முர்த்தி<br>ஒப்பந்ததாரர்,<br>திருப்பத்தூர். | | 0.10% சதவீதம் மதிப்பீட்டை விட குறை. |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் கே.முர்த்தி ஒப்பந்ததாரர், திருப்பத்தூர் அவர்கள் மதிப்பீட்டை விட குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ளார். எனவே குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய கே.முர்த்தி, ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் ஏற்றுக்கொள்ளலாம்.
2. குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.
3. பணிக்கான செலவீனத் தொகையினை சட்ட மன்றம் உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் நிதி 2024–2025–ஆம் நிதியாண்டின் கீழ் வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.0087/2024/இ1**

**தீர்மானம் எண்.809, நாள்.20.03.2025**
**நிராகரிக்கப்பட்டது.**

810). திருப்பத்தூர் நகராட்சி வார்டு எண்.34 காமராஜர் நகர், பகுதியில் பல்நேக்கு கட்டிடம் (Multipurpose Building) பணிக்கு ரூ.8.00 இலட்சம் மதிப்பீட்டில் சட்ட மன்றம் உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம், 2024–2025–ஆம் ஆண்டு பணிகள் செய்ய 20.12.2025–ஆம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியின் ஒப்பு நோக்கு பட்டியல் விவரம் கீழ்கண்டுள்ளவாறு

| ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்புநோக்கு பட்டியல் விவரம் |
|---|---|---|
| திரு.S. ரவி<br>ஒப்பந்ததாரர்<br>திருப்பத்தூர். | 8.00 | 0.85<br><br>% சதவீதம் மதிப்பீட்டை விட அதிகம். |

| | | |
|---|---|---|
| திரு.கே.முர்த்தி<br>ஒப்பந்ததாரர்,<br>திருப்பத்தூர். | | 0.13% சதவீதம் மதிப்பீட்டை விட குறை. |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் கே.முர்த்தி ஒப்பந்ததாரர், திருப்பத்தூர் அவர்கள் மதிப்பீட்டை விட குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ளார். எனவே குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய கே.முர்த்தி, ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் ஏற்றுக்கொள்ளலாம்.
2. குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.
3. பணிக்கான செலவீனத் தொகையினை சட்ட மன்றம் உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் நிதி 2024–2025–ஆம் நிதியாண்டின் கீழ் வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.0087/2024/இ1**

**தீர்மானம் எண்.810, நாள்.20.03.2025**
**நிராகரிக்கப்பட்டது.**

811). திருப்பத்தூர் நகராட்சி வார்டு எண்.35 அண்ணா நகர் மற்றும் ஆறுமுகனார் தெருவில் இரண்டு சின்டெக்ஸ் டேங்க் மற்றும் மோட்டார் பழுது செய்து அமைத்து தர தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை **ரூ. 2.00 இலட்சம்** மட்டும். எனவே மேற்கண்ட பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.811, நாள்.20.03.2025**
**நிராகரிக்கப்பட்டது.**

812). திருப்பத்தூர் நகராட்சியில் வார்டு எண்.36 திருமால் நகர் பகுதியில் உள்ள நகராட்சி நடுநிலைப்பள்ளி உள்ள வகுப்பறை புனரமைப்பு பணி மேற்கொள்ள மற்றும் கழிப்பிடம் அமைக்கும் பணி தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை **ரூ.9,50 இலட்சம்** மட்டும். எனவே மேற்கண்ட பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.812, நாள்.20.03.2025**
**நிராகரிக்கப்பட்டது.**

813). திருப்பத்தூர் நகராட்சிக்கு புதிய தலைமை அலுவலக கட்டிடம் அமைக்கும் பணிக்கு நகராட்சி நிர்வாக இயக்குனர் சென்னை அவர்களின் செயல்முறை ஆணை **ந.க.எண்/12079/2024/SS2** நாள்: 06.02.2025 இன் படி **Operation and Maintenance Deficit Grand Fund 2024-2025 (Phase v)** நிதியின் கீழ் நிர்வாக அனுமதி பெறப்பட்டத்தின் விவரத்தினை மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**Annexure -8**

**Thirupathur Municipality**

**Work Sanctioned under Operation and Maintenance Deficit Grand Fund 2024-2025 approved in 16th CPSMC**

| | | | | Rs.in Crore |
|---|---|---|---|---|
| **S.No** | **Name of Work** | **Approved Project Cost** | **Amount Approved In O&M DGF 2024-25** | **ULB Share** |
| 1 | Construction of Municipal Office building at S.F.No.339/29. | 4.95 | 2.95 | 2.00 |

<u>**அலுவலக குறிப்பு:**</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.813, நாள்.20.03.2025**
**அனுமதிக்கப்பட்டது.**

814). திருப்பத்தூர் நகராட்சிக்கு சொந்தமான 22 மேல்நீர் தேக்க தொட்டிக்கு திரவ குளோரின் செலுத்தும் அமைப்பு (Plan) அமைத்து குடிநீரில் குளோரின் கலந்து விநியோகம் செய்யப்படும் பணிக்கு **ரூ.10.00** இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் செய்ய **17.12.2024**-ஆம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியின் ஒப்பு நோக்கு பட்டியல் விவரம் கீழ்கண்டுள்ளவாறு.

| **ஒப்பந்ததாரர் பெயர்** | **மதிப்பீடு தொகை ரூ. இலட்சத்தில்** | **ஒப்புநோக்கு பட்டியல் விவரம்** |
|---|---|---|
| திரு. S. விமல்ராஜ், ஒப்பந்ததாரர், வேலூர். | 10.00 | 1.15% சதவீதம் மதிப்பீட்டை விட அதிகம். |
| திரு. M. நித்தியானந்தன், ஒப்பந்ததாரர், வேலூர். | | **0.13%** சதவீதம் மதிப்பீட்டை விட குறைவு. |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் **திரு. M. நித்தியானந்தன் வேலூர்** அவர்கள் மதிப்பீட்டை விட குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ளார். எனவே குறைந்த

ஒப்பந்தப்புள்ளி வழங்கிய **M. நித்தியாணந்தன்,** பணி உத்தரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் ஏற்றுக்கொள்ளலாம்.
2. குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.
3. பணிக்கான செலவீனத் தொகையினை குடிநீர் நிதி 2024–2025–ஆம் நிதியாண்டின் கீழ் வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.1399/2024/இ1**

**தீர்மானம் எண்.814, நாள்.20.03.2025**
**நிராகரிக்கப்பட்டது.**

815). திருப்பத்தூர் நகராட்சியில் உள்ள அனைத்து பிரிவுகளிலும் பயன்படுத்தப்படும் கணினிக்கு **Keyboard மற்றும் Mouse** புதிதாக வாங்கி வழங்கும் பணிக்கு **ரூ.50000** மதிப்பீட்டில் பணிகள் செய்ய **11.12.2024**–ஆம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியின் ஒப்பு நோக்கு பட்டியல் விவரம் கீழ்கண்டுள்ளவாறு

| ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. | ஒப்புநோக்கு பட்டியல் விவரம் |
|---|---|---|
| Goodluck Computer வாணியம்பாடி. | **50000** | **3.52%** சதவீதம் மதிப்பீட்டை விட குறைவு. |
| திரு. V. மீனாட்சி, ஒப்பந்ததாரர், வாணியம்பாடி. | | 1.59% சதவீதம் மதிப்பீட்டை விட அதிகம். |
| திரு. பவித்ரா, ஒப்பந்ததாரர், திருப்பத்தூர். | | 4.45% சதவீதம் மதிப்பீட்டை விட அதிகம். |
| திரு. சர்வேஷ் ADS, ஒப்பந்ததாரர், திருப்பத்தூர். | | 0.15% சதவீதம் மதிப்பீட்டை விட அதிகம். |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் **Goodluck Computer,** வாணியம்பாடி அவர்கள் மதிப்பீட்டை விட குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ளார். எனவே குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய **Goodluck Computer,** பணி உத்தரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் ஏற்றுக்கொள்ளலாம்.
2. குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.
3. பணிக்கான செலவீனத் தொகையினை பொது நிதி 2024–2025–ஆம் நிதியாண்டின் கீழ் வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.1399/2024/இ1**

**தீர்மானம் எண்.815, நாள்.20.03.2025**
**நிராகரிக்கப்பட்டது.**

816). திருப்பத்தூர் நகராட்சியில் உள்ள சௌகத்தலிபேட்டை நகராட்சி துவக்கப்பள்ளி, பேருந்து நிலையம் அருகில் உள்ள வகுப்பறை புனரமைப்பு பணி மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை **ரூ. 4.00 இலட்சம்** மட்டும். எனவே மேற்கண்ட பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.816, நாள்.20.03.2025**
**நிராகரிக்கப்பட்டது.**

817). திருப்பத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட வாணியம்பாடி ரோடு முதல் புதுபேட்டை ரோடு வரை தேசிய நெடுஞ்சாலையின் Center Median பகுதியில் நகராட்சிக்கு சொந்தமான மின் விளக்கு கம்பங்களில் அனுமதியின்றி Digital Banners வைக்கப்பட்டுள்ளது தொடர்பாக திரு.S.ராகவன் என்பவரால் சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு எண். W.P.NO.36915/2024 தொடரப்பட்டுள்ளது அதற்கு இடைக்கால உத்தரவு வரப்பெற்றுள்ளது

திரு.P.சீனிவாஸ், கூடுதல் அரசு வழக்கறிஞர் அவர்களின் கடிதம் நாள்.18.03.2025–ன்படி, மாண்புமிகு சென்னை உயர்நீதி மன்றத்தில் தொடர்ந்த (W.P.No. 36915/2024) வழக்கிற்கான வழக்கறிஞர் கட்டணம் சுமார் ரூ.40000/– தொகை செலவினத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

திரு. P.சீனிவாஸ், கூடுதல் அரசு வழக்கறிஞர் அவர்களுக்கு சென்னை உயர்நீதி மன்றத்தில் திரு.S.ராகவன் தொடர்ந்த (W.P.No. 36915/2024) வழக்கிற்கு நகராட்சி சார்பாக அஜரான வழக்கிற்கான வழக்கறிஞர் கட்டணம் சுமார் ரூ.40000/– ஐ நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.0130/2024/எப்1,**

**தீர்மானம் எண்.817, நாள்.20.03.2025**
**நிராகரிக்கப்பட்டது.**

818). திருப்பத்தூர் நகரம் 1886–ம் வருடத்தில் நகராட்சியாக 4.66 Sq.km பரப்பளவு கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது, 1977–ம் வருடத்தில் முதல்நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டும், 2008–ம் வருடத்தில் தேர்வுநிலை நகராட்சியாக தரம்

உயர்த்தப்பட்டும் இயங்கி வந்த நிலையில், இதனை ஒட்டி இருந்த திருப்பத்தூர் கிராமத்தினை இணைத்து, 2011–ம் வருடத்தில் 9.79 Sq.km பரப்பளவு கொண்டதாக எல்லை விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது. எல்லை விரிவாக்கம் செய்யப்பட்ட பின்பு 2022–ம் வருடத்தில் இந்நகராட்சியின் நிலைக்கு உரிய 36 வார்டுகளுடன் வார்டு மறுவரையறை செய்யப்பட்டு 2022–ம் வருடத்தில் உள்ளாட்சி தேர்தல் நடத்தப்பெற்று, இதில் தேர்ந்தெடுக்கப்பட்ட 36 நகர உறுப்பினர்களுடன் நிர்வாகம் நடந்து வருகிறது.

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதத்தில் அரசு தலைமைச் செயலாளர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற சாலைகள் மற்றும் பாலங்கள் பணி முன்னேற்றம் தொடர்பான ஆய்வுக் கூட்டத்தில் நகர்புற உள்ளாட்சி அமைப்பு மற்றும் அதனை சுற்றியுள்ள புறநகர் பகுதிகளின் உள்ள சாலைகள் மற்றும் பாலங்கள் நிலை குறித்து விவாதிக்கப்பட்டதில், சில கிராம உள்ளாட்சிகளை அருகிலுள்ள நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுடன் அடுத்த உள்ளாட்சித் தேர்தலுக்கு முன் இணைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவும் நகரத்தினை ஒட்டியுள்ள கீழ்கண்ட கிராமப்பகுதிகளின் நகர வளர்ச்சி கூறுகள் சிறப்பாக உள்ளதை கருத்தில் கொண்டு, திருப்பத்தூர் நகரம் சுற்றியுள்ள கிராமப்புறப் பகுதிகளை ஒருங்கிணைத்து திருப்பத்தூர் நகர எல்லை விரிவாக்கம் செய்வதற்கான கருத்துரு அனுப்பவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் நகராட்சியினை ஒட்டி அமைந்துள்ள ஊராட்சிகளின் வருவாய் மற்றும் தற்போதைய மக்கள் தொகை வளர்ந்து வரும் தன்மை ஆகியவற்றை கருத்தில் கொண்டு அருகிலுள்ள நகராட்சிளுடன் இணைப்பது குறித்தான செயற் குறிப்பினை சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் பரிந்துரையுடன், ஊராட்சிகளின் பட்டியல் ஒருங்கிணைப்பு வரைபடம், நகர மன்ற தீர்மானம், ஊராட்சி நகர்மன்ற தீர்மானம், ஊராட்சிகளின் பட்டியல் , ஊராட்சிகளின் மக்கள் தொகை மூன்றாண்டுகளில் தணிக்கை செய்யப்பட்ட வரவு–செலவு அறிக்கை, ஆகிய விவரங்களுடன் அனுப்ப தெரிவிக்கபட்டுள்ளது. எனவே, நகராட்சி ஒட்டியுள்ள 6 எண்ணிக்கை ஊரக உள்ளாட்சி அமைப்புகள் பட்டியலில் குறிப்பிட்டுள்ள கிராமப்பகுதிகளை திருப்பத்தூர் நகராட்சியுடன் இணைத்து எல்லை விரிவாக்கம் செய்ய மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகின்றது.

| வ.எண் | ஊர் பெயர் | பரப்பளவு (Sq.km) | மக்கள் தொகை | நி.உ.உள்ள தூரம் |
|---|---|---|---|---|
| 1 | பாச்சல் | 7.51 | 16789 | 0.25 km |
| 2 | வெங்களாபுரம் | 490 | 3210 | 1.50 km |

| | | | | |
|---|---|---|---|---|
| 3 | ஆதியூர் | 9.79 | 9329 | 0.5 km |
| 4 | சு.பள்ளிப்பட்டு | 2.84 | 4998 | 0.5 km |
| 5 | கசிநாயக்கம்பட்டி | 5.78 | 1904 | 0.21 km |
| 6 | கதிரிமங்கலம் | 5.85 | 5649 | 1.60 km |
| | | 46.46 | 120116 | |

**அலுவலக குறிப்பு :**

மேற்குறிப்பிட்டவாறு, திருப்பத்தூர் நகர எல்லை விரிவாக்கம் செய்ய பட்டியலில் உள்ள ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் கிராமப்பகுதிகளை திருப்பத்தூர் நகராட்சியுடன் இணைத்து எல்லை விரிவாக்கம் செய்யலாம், மன்றம் அங்கீரிக்கலாம்.

**ந.க.எண். 1842/2024/எப்1**
**தீர்மானம் எண்.818, நாள்.20.03.2025**
**நிராகரிக்கப்பட்டது.**

819). திருப்பத்தூர் நகராட்சி பழைய பேருந்து நிலைய வளாகத்தில் மாவட்ட நிர்வாகம் நடத்தும் நான்காவது புத்தகத் திருவிழா 22.03.2025 முதல் 31.03.2025 வரை நடைப்பெற உள்ளதால், அரசாணை எண் 205, பள்ளி கல்வி (பொது.நூ.2) துறை நாள்.18.09.2024 மற்றும் மாவட்ட ஆட்சியர் அவர்களின் உத்தரவு கடிதம் COLREV–COLR/44964/2024–A4 நாள்.17.03.2025–ன் படி நகராட்சி மூலம் பஸ் நிலையம், ரயில் நிலையம், சந்தை மைதானங்கள், முக்கிய கல்லூரி அருகே விளம்பர பதாகைகள் வைக்கவும் மற்றும் ஆட்டோவில் ஒலிப்பெருக்கி மூலம் விளம்பரம் செய்யவும், இருசக்கர மற்றும் நான்குசக்கர வாகனங்கள் நிறுத்தும் இடம் தேர்வு செய்து வழங்க தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, மேற்படி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் ஆணைக்கு இணங்க நகராட்சி எல்லைக்குட்பட்ட மேற்கூறிப்பிட்டுள்ள பகுதிகளில் விளம்பர பதாகைகள் வைக்கவும், ஆட்டோவில் ஒலிப்பெருக்கி மூலம் விளம்பரம் செய்யவும், மற்றும் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் பொதுமக்கள் பயன்பெறும் வண்ணம் வேலைவாய்ப்பு முகாம் விளம்பர பதாகைகள் வைக்கவும் இதற்கு உண்டான உத்தேச செலவீனம் ரூ. 1 லட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

1) விளம்பர பதாகைகள் வைக்கவும், ஆட்டோவில் ஒலிப்பெருக்கி மூலம் விளம்பரம் செய்யவும், அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.
2) இச்செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.819, நாள்.20.03.2025**
**நிராகரிக்கப்பட்டது.**

820).

பொருள் : நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில் சுயசான்றளிப்பு வரையறைக்குட்படாத குடியிருப்பு மற்றும் குடியிருப்பு அல்லாத கட்டுமானங்களுக்கு ஒற்றைச்சாளர இணைய முகப்பில் ( Single Window Portal) கட்டட அனுமதி வழங்குவதற்கு செலுத்தவேண்டிய ஒருங்கிணைந்த கட்டணங்களை நிர்ணயம் செய்து வரப்பெற்ற அரசாணை (ப) எண்.72, நகராட்சி நிறுவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.1) துறை நாள். 05.02.2025–யில் நகராட்சி நிர்வாக இயக்குனர், சென்னை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.31917/2019/டிபி2, நாள்.13.02.2025 மன்றத்தின் பார்வைக்கும் தகவலுக்கும்.

<u>அலுவலக குறிப்பு :</u>

(அ) மன்றம் பதிவு செய்யலாம்.

(ஆ)

| நகராட்சிகள் – குடியிருப்பு கட்டுமானம் – கட்டண விவரம் | | | | |
|---|---|---|---|---|
| சுயசான்றளிப்பு வரையறைக்குட்படாத கட்டடங்கள் (3500 சதுர அடிக்கு மேல்) | | | ஒருங்கிணைந்த கட்டணம் | |
| வ.எண். | நகராட்சியின் நிலை | எண்ணிக்கை | ரூ/சதுர மீட்டர் | ரூ/சதுர அடி |
| 1 | சிறப்பு நிலை நகராட்சிகள் | 13 | 800 | 74 |
| 2 | தேர்வு நிலை நகராட்சிகள் | 28 | 800 | 74 |
| 3 | நிலை–I நகராட்சிகள் | 31 | 750 | 70 |
| 4 | நிலை–II நகராட்சிகள் | 65 | 750 | 70 |
| கூடுதல் | | 137 | | |

அரசாணையில் தெரிவிக்கப்பட்ட மேற்படி கட்டண வழிகாட்டுதலின் படி வ.எண்.02 தேர்வு நிலை நகராட்சிக்கு குறிப்பிட்டுள்ள ரூ.800.00/– சதுர மீட்டர் (அ) ரூ.74.00/சதுர அடி என்ற அடிப்படையில் திருப்பத்தூர் நகராட்சியில் 3500 சதுர அடி வரை மேற்படி கட்டணங்கள் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. 3500 சதுர அடிக்கு மேல் கட்டப்படும் கட்டிடங்களுக்கு அரசாணையில் குறிப்பிட்டுள்ள கட்டப்படும் கட்டிடங்களுக்கு கட்டணங்களை வசூல் செய்துக் கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(இ) இதர குடியிருப்பு கட்டுமானங்களுக்கு ( Other than self – Certification buildings) 125% 1.25 மடங்கிற்கு குறையாமல் இருக்குமாறு பட்டியலில் கண்டுள்ள கட்டணத்தை நிர்ணயம் செய்து வழங்கப்பட்டுள்ளதை மன்றம் அனுமதிக்கலாம்.

| நகராட்சிகள் – குடியிருப்பு அல்லாத கட்டுமானம் – கட்டண விவரம் | | | | |
|---|---|---|---|---|
| எந்த அளவிலான கட்டட பரப்பளவிற்கும் (For any extent of Building) | | | ஒருங்கிணைந்த கட்டணம்(1.25 மடங்கு) | |
| வ. எண் | நகராட்சியின் நிலை | எண்ணிக்கை | ரூ.ச.மீ | ரூ.சதுர அடி |
| 11 | சிறப்பு நிலை நகராட்சிகள் | 13 | 1000 | 93 |

| | | | | |
|---|---|---|---|---|
| 2 | தேர்வு நிலை நகராட்சிகள் | 28 | 1000 | 93 |
| 3 | நிலை–I நகராட்சிகள் | 31 | 938 | 87 |
| 4 | நிலை–II நகராட்சிகள் | 65 | 938 | 87 |
| 1 | | 137 | | |

அரசணையில் தெரிவிக்கப்பட்ட மேற்படி குடியிருப்பு கட்டண வழிகாட்டுதலின் படி 1.25 மடங்கு என்ற விகிதத்தில் வ.எண்.02 தேர்வு நிலை நகராட்சிகளுக்கு குறிப்பிட்டுள்ள ரூ.1000.00 சதுர மீட்டர் (அ) ரூ.93.00 / சதுர அடி என்ற அடிப்படையில் திருப்பத்தூர் நகராட்சியில் குடியிருப்பு அல்லாத இதர கட்டுமானங்களுக்கு கட்டணங்களை வசூல் செய்துக் கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

மேலும் வசூலிக்கப்பட வேண்டிய பாதாள சாக்கடைத் திட்ட வைப்புத் தொகை இணைப்பு ஒன்றிற்கு

| வ. எண் | நகர்ப்புற உள்ளாட்சியின் வகைப்பாடு | கட்டுமான பரப்பளவு | கட்டட உபயோகம் (ரூபாயில்) | |
|---|---|---|---|---|
| | | | குடியிருப்பு கட்டுமானம் | குடியிருப்பு அல்லாத கட்டுமானம் |
| 1 | நகராட்சிகள் | 3500 சதுர அடிக்கு கீழ் | 7,500 | 15,000 |
| 2 | | 3501 சதுர அடிகள் முதல் 10,000 சதுர அடிகள் வரை | 10,000 | 20,000 |
| 3 | | 10,001 சதுர அடிக்கு மேல் | 20,000 | 40,000 |

கட்டட உரிமம் பெறுவதற்கு வசூலிக்கப்பட வேண்டிய கட்டணங்களின் வரம்பினை விதிகளுக்கு உட்பட்டு நிர்ணயம் செய்ய நகராட்சி நிருவாக இயக்குநர் அவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.
II மேற்காணும் கட்டட உரிம கட்டணங்கள் பின்வரும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு அரசால் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

1. தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சிகள் சட்டம்1998, சட்டப்பிரிவு 198, உட்பிரிவு (2) (xvii)–ல் அரசுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் அடிப்படையில் மேற்கண்டவாறு கட்டட உரிமக் கட்டணங்கள் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.
2. தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சிகள் சட்டம், 1998, பிரிவு 199 மற்றும் தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சிகள் விதிகள், 2023–ல் விதி 394–ன் படி நகர்ப்புர உள்ளாட்சி மன்றங்கள் மேற்காணும் கட்டணங்கள் நிர்ணயம் செய்வதிலிருந்து தளர்வு செய்யப்பட்டுள்ளது.
3. மேற்காணும் கட்டணங்கள் கட்டட உரிய கட்டணம், உட்கட்டமைப்பு மற்றும் வசதிகள் நிதி, வளர்ச்சிக் கட்டணம் மற்றும் தொழிலாளர் நல நிதி ஆகிய நான்கு வகை கட்டணங்களுடன் சேர்த்து ஒருங்கிணைந்த கட்டணமாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.
4. அரசாணை (நிலை) எண்.166, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் ( நவ4(1)) துறை, நாள். 21.11.2023 மற்றும் அரசாணை (நிலை) எண்.172, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் (நவ 4(3)) துறை, நாள்.13.10.2017 இன் படி, 20.10.2016–க்கு முன்னர் பதிவு செய்யப்பட்ட அனுமதியற்ற மனைகளுக்கு, அனுமதியற்ற மனை மற்றும் மனைப்பிரிவு விதிகள் 2017 குறிப்பிட்டுள்ளவாறு முறையே வரன்முறை கட்டணம் (Regularisation Charges)

மற்றும் வளர்ச்சிக் கட்டணம் (Development Charges) ஆகிய கட்டணங்கள் வசூலிக்கப்பட வேண்டும்.

5. காலிமனை வரி மற்றும் பாதாள சாக்கடை கட்டணம் செலுத்தப்பட்டு அதற்குரிய இரசீது நகலை கட்டட அனுமதி விண்ணப்பத்துடன் பதிவேற்றம் செய்யப்பட வேண்டும்.

6. வைப்புத் தொகைகளின் வரம்பினை விதிகளுக்கு உட்பட்டு நிர்ணயம் செய்ய நகராட்சி நிருவாக இயக்குநர் அவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

7. மேற்படி அனைத்து வகையான கட்டணங்களையும் அவ்வப்போது அரசால் மறு நிர்ணயம் செய்து ஆணை பிறப்பிக்கப்படும் பொழுது, அவ்வாணையின்படி நிர்ணயிக்கப்படும் கட்டணங்கள் வசூலிக்கப்பட வேண்டும்.

8. நகராட்சிகள் வகைப்பாடுகளில் தரம் உயர்த்தப்படும் பொழுது, அதற்கேற்றவாறு கட்டண விகிதங்களை மாறுதல் செய்து பின்பற்றப்பட வேண்டும்.

இவ்வாணையினை அனைத்து, நகராட்சிகள் மன்றத்தின் பதிவிற்கு வைத்து செயல்படுத்துமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

**ந.க.எண்.0826/2024/எப்1**

**தீர்மானம் எண்.820, நாள்.20.03.2025**
**நிராகரிக்கப்பட்டது.**

**// உண்மைநகல் //**

ஆணையாளர்,
திருப்பத்தூர் நகராட்சி.